எஸ்.சி. எண்204/2016 சுப்புலட்சுமி அசா3. தேதி:14.12.2022

சாட்சி மனுவின்மீது மீண்டும்அழைக்கப்பட்டு எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை.

எனது மகள் தான் கனகலட்சுமி என்றால்சரிதான். எனது மகளை உள்ளூரில் திருமணம்செய்துகொடுத்தேன் என்றால்சரிதான். எனது மகளுக்கு தனிவீடு இல்லை. என்னோடுதான் வசித்து வருகிறார். எனது மருமகன் வெளிநாட்டில் இருந்து வந்தாலும் எங்கள் வீட்டில்தான் வசித்து வருகிறார். எனது தகப்பனார் எதிரியின் மனைவி மற்றும் என்னுடைய சம்மத்தின்பேரில்தான் வீட்டை எனது தங்கை பஞ்சாமிர்தத்திற்கு எழுதிகொடுத்தார் என்றால் சரிதான். எனது திருமணத்திற்கு பிறகு எதிரியின் மனைவியோடு எனக்குபேச்சுவார்த்தை கிடையாது. எதிரியின் மகள் சுதா என்பவரை உள்ளூரில்தான் திருமணம்செய்துகொடுக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்குதெரியாது. எதிரியின் அக்கா எங்கள் ஊரில் வசித்து வருகிறார் என்றால்சரிதான். எனது அப்பா எனது தங்கைக்கு எழுதிகொடுத்த வீட்டிற்கு எதிரேதான் மேற்படி சுதா என்பவர் திருமணம்செய்துகொடுக்கப்பட்டுள்ளார் என்றால்சரிதான். சுதா மேற்படி வீட்டில்குடியிருந்து வருகிறாரா என்று எனக்குதெரியாது. போலிசார் என்னை கோவில்பட்டியில் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். போலிசாரிடம் கோடுவாளை வைத்து எதிரி வெட்டியதாக சொல்லவில்லை. கொடுஅருவாளை வைத்து வெட்டியதாக சொன்னேன். போலிஸ்விசாரணையில் எதிரி எல்லோரும்மீதும் மிளகாய்பொடி வீசியதாக நான்சொன்னேன். கிருஷ்ணமூர்த்தி மீதும்மட்டும் மிளகாய்பொடி எதிரிவீசியதாக நான்சொல்லவில்லை. எங்கள்வீட்டின்முன்பு மிளகாய்பொடி மற்றும்ரத்தகறை ஆகியவை இருந்தது. சம்பவத்தின்போது எனக்கு இடது கையில் ஒரு காயம் ஏற்பட்டது. நான், அசா1, மற்றும்அசா2 ஆகியோர்கள் மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரிதான். நான் கையெழுத்துஎதுவும் போலிசாரிடம் போட்டுகொடுக்கவில்லை. போலிசார் யாரிடம் கையெழுத்துபெற்றார்கள் என்று எனக்கு தெரியாது. எதிரி சம்பவத்தன்று அவரது மகள்வீட்டிற்கு வந்தார் என்றும் எதிரியை நாங்கள் தான் அடித்து காயப்படுத்தினோம் என்றுசொன்னால்சரியல்ல. எதிரி எங்கள் யாரையும் காயப்படுத்தவில்லை என்றும் எங்கள் வீட்டிற்கும் வரவில்லை என்றும்சொன்னால் சரியல்ல. நாங்கள் தான் எதிரியை காயப்படுத்னோம் என்றுசொன்னால் சரியல்ல.

நாங்கள் தான் இந்த வழக்கில் உண்மையான குற்றவாளிகள் என்றுசொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றுசொன்னால் சரியல்ல. திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)R.Rathinavel Pandian
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி